தமிழ்நாடு தீயணைப்பு மீட்புப்பணிகள் துறை கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்)
அவர்களது செயல்முறை ஆணைகள், சென்னை -600 008
பிறப்பிப்பவர்: திரு.மு.ஷொகுல்ஹமீது, B.Sc.,M.A.,A.Dip(NFSC).,GIFE(I).
கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்)

ந.க..எண்.8221/ஆ4/2019

நாள்.06.07.2021

பொருள்: தீயணைப்பு மீட்புப்பணிகள் துறை - இயக்ககம் - கருணை அடிப்படை நியமனம் - செல்வன்.தா.விக்னேஷ்வரன், தட்டச்சர் என்பவருக்கு தட்டச்சர் பதவியில் பணி வரன்முறை செய்து ஆணைகள் வழங்குதல்.

பார்வை: 1) இயக்கக செயல்முறை ஆணை ந.க.எண்.8221/ஆ4/2019 நாள்.12.09.2019.
2) அரசாணை (நிலை) எண்.48 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ1) துறை, நாள்.26.02.2021
3) 16.03.2021 நாளிட்ட உள்(காவல்-17) துறை கடிதம் எண்.22451/காவல்-17/2020-4

-----

மத்தியசென்னை மாவட்டம், திருவல்லிக்கேணி தீயணைப்பு மீட்புப்பணிகள் நிலையத்தில் பணிபுரிந்து பணியிடையில் 06.11.2017 அன்று காலஞ்சென்ற திரு.வெ.தாமோதரன், நி.அ (போ) என்பவரது மகன் செல்வன் தா.விக்னேஷ்வரன் என்பவருக்கு பார்வை(1)-ல் காணும் ஆணையின்படி கருணை அடிப்படையில் தற்காலிக தட்டச்சர் பணி வழங்கி இயக்குநர் அலுவலகத்தில் நியமனம் செய்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டது. அவ்வாணையின்படி செல்வன் தா.விக்னேஷ்வரன் இயக்குநர் அலுவலகத்தில் 16.09.2019 முற்பகல் முதல் தற்காலிக தட்டச்சராக பணிபுரிந்து வருகிறார். மேற்படி பணியாளரது தட்டச்சர் பதவிக்கான பணிவரன்முறை குறித்து அரசினருக்கு பிரேரணை அனுப்பி வைக்கப்பட்டதில் பார்வை(2)-ல் காணும் அரசாணையின்படி தனியரது பணியினை வரன்முறை செய்யுமாறு பார்வை(3)-ல் காணும் அரசுக் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை(2)-காணும் அரசாணையில் பத்தி (5.1) –ல் 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணையடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எந்தவித விதித்தளர்வு (**Relaxation of Rules**) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (**Exemption of Government Orders**) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணிநியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்தப்படுகிறது எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே செல்வன் தா.விக்னேஷ்வரன் நேர்வில் இப்பணியாளரது கருணை அடிப்படை பணிநியனமனத்திற்கு எந்தவித விதித்தளர்வு (**Relaxation of Rules**) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (**Exemption of Government Orders**) தேவைப்படும் நிலை எழவில்லை. எனவே பார்வை(2)-காணும் அரசாணையில் பத்தி (5.2)-ல் அறிவுறுத்தியபடி தனியருக்கு கீழ்காணுமாறு பணிவரன்முறை செய்யப்படுகிறது.

(2)...,

ஆணைகள்:-

கருணை அடிப்படையில் தட்டச்சராக 16.09.2019 முற்பகல் பணி நியமனம் செய்யப்பட்டு இயக்குநர் அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் செல்வன் தா.விக்னேஷ்வரன் என்பவருக்கு பார்வை(2)-ல் காணும் அரசாணை பத்தி (5.1) (5.2)-ல் அறிவுறுத்தியுள்ளபடி இவரது தட்டச்சர் பணியினை 16.09.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணைகள் பிறப்பிக்கப்படுகிறது.

2) பணிவரன்முறை ஆணைகள் பிறப்பிக்கப்பட்ட விவரம் பணியாளரது பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

கூடுதல் இயக்குநர்(நிர்வாகம்),
தீயணைப்பு மீட்புப்பணிகள்துறை,
தமிழ்நாடு.

பெறுநர்: செல்வன் தா.விக்னேஷ்வரன்,
தட்டச்சர்,
இயக்ககம்,
தீயணைப்பு மீட்புப்பணிகள்துறை,
எழும்பூர், சென்னை -600 008.

நகல்: "ஆ1" இருக்கை உதவியாளர், இயக்ககம், சென்னை-08

நகல்: "அ4" இருக்கை உதவியாளர், இயக்ககம், சென்னை-08

நகல்: கோப்பிற்கு.